2014 ஆகஸ்ட் 11] [பேரவைத் தலைவர்]

தேர்ந்தெடுக்கப்பெற விரும்பும் வேட்பாளர்கள் தங்களின் வேட்பு மனுவினை இன்று பிற்பகல் 3–00 மணிக்குள் பேரவைச் செயலாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும். வேட்பு மனு படிவம் வேண்டுவோர் பேரவைச் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். வேட்பு மனுக்கள் இன்று பிற்பகல் 4–00 மணிக்கு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

விலகிக்கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் இன்று மாலை 5–00 மணிக்குள் தங்களது வேட்பு மனுவினைத் திரும்பப் பெறலாம்.

தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர் ஏதாவதொரு காரணத்திற்காக பேரவை உறுப்பினர் பதவியை இழக்க நேரிட்டால், அந்நாளோடு பல்கலைக்கழகத்தின் அமைப்பில் அவர் வகித்து வரும் உறுப்பினர் பதவியும் முடிவடையும்.

செல்லத்தக்க வேட்பு மனுக்களின் எண்ணிக்கை, நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு மேற்படுமாயின், அப்பல்கலைக்கழகங்களின் அமைப்புகளுக்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க தேர்தல் நடைபெறும். தேர்தல் நடைபெறும் நாள் பின்னர் அறிவிக்கப்படும்.

4. கவன ஈர்ப்பு

திருநங்கைகளுக்கான நலவாழ்வுத் திட்டங்களைச் செயல்படுத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. அ. சவுந்தரராசன், செல்வி கே. பாலபாரதி, திரு. க. பாலகிருஷ்ணன், திரு. கே. தங்கவேல், திரு. இரா. அண்ணாதுரை, திரு. க. பீம்ராவ், திரு. வீ.பி. நாகைமாலி, திரு. ஆர். ராமமூர்த்தி, திரு. வி.சி. சந்திரகுமார், திரு. ப. பார்த்தசாரதி, திரு. ர.ம. பாபு முருகவேல், திரு. கு. நல்லதம்பி ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

முற்பகல் 11–35

செல்வி கே. பாலபாரதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் திருநங்கைகளுக்கான நல்வாழ்வுத் திட்டங்களைச் செயல்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

அறிக்கை

திருநங்கைகளால் எதிர்கொள்ளப்படும் பல்வேறு பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உதவிடும் வகையில் தமிழ்நாடு அரசால், அரவாணிகள் நல வாரியம், அரசாணை (நிலை) எண் 38, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 15–4–2008-ல் அமைத்து ஆணையிடப்பட்டது.

தமிழ்நாடு அரவாணிகள் நல வாரியத்தின்மூலம் 4,579 திருநங்கைகள் கணக்கெடுப்பு செய்யப்பட்டு, அதில் 3,965 பேர் திருநங்கைகள் எனக் கண்டறியப்பட்டு, அவர்களில் 3,687 திருநங்கைகளுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

இதுவரை 1,523 திருநங்கைகளுக்கு குடும்ப அட்டையும், 1,066 திருநங்கைகளுக்கு வீட்டுமனைப் பட்டாவும், 108 திருநங்கைகளுக்கு தையல் இயந்திரமும், 654 திருநங்கைகளுக்குக் காப்பீட்டு அட்டையும் வழங்கப்பட்டுள்ளது.

அரசாணை (நிலை) எண் 24, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 25–2–2012-ல், இவ்வாரியத்திற்கு ஒதுக்கப்பட்ட ரூ.1.00 கோடியில் திருநங்கைகள் உயர் கல்வி பயில ரூ.1.00 இலட்சம் ஒதுக்கீடு செய்து ஆணையிடப்பட்டது. இதனடிப்படையில், இதுவரை விண்ணப்பித்துள்ள சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த "இந்து" என்ற திருநங்கைக்கு அவர் கேட்டுக்கொண்டபடி, ஆசிரியர் பயிற்சி பெற, கல்வி உதவித் தொகையாக ரூ.48,280/– வழங்கப்பட்டுள்ளது.

2014 ஆகஸ்ட் 11] [திருமதி பா. வளர்மதி]

திருநங்கைகள் தங்களது வாழ்வாதாரத்தைப் பெருக்கிக்கொள்ளவும், பொருளாதாரரீதியாகத் தங்களை உயர்த்திக்கொள்ளவும், 25 சதவிகித அரசு மானியத்துடன் திருநங்கைகள் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.15.00 இலட்சம் வரை வங்கிக் கடன், அரசாணை (நிலை) எண் 105, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 30–11–2011–ன்படி வழங்கப்படுகிறது. இதுவரை திருநங்கைகளின் 51 சுய உதவிக் குழுக்களில் உள்ள 442 திருநங்கைகள் பயன்பெறும் வகையில் 25 சதவிகித மானியமான ரூ.55.45 இலட்சத்தை அரவாணிகள் நல வாரியம் வழங்கியுள்ளது.

இதில் திட்டம் வாரியான விவரம் பின்வருமாறு கொடுக்கப்பட்டுள்ளது:

வ. எண்	திட்டம்	பயனாளிகள் (சுய உதவிக் குழுக்களின் எண்ணிக்கை)
1.	பெட்டிக் கடை, மளிகைக் கடை துவங்க	11
2.	ஆடு, மாடு வளர்த்தல்	1
3.	உணவகம்	4
4.	பயணிகள் ஆட்டோ மற்றும் சரக்கு ஆட்டோ	2
5.	துணி வியாபாரம், பால் வியாபாரம், வேளாண்மைப் பொருட்கள் விற்பனை மற்றும் பிற தொழில்கள்	28
6.	சோப்பு வியாபாரம், கயிறு திரித்தல், அழகு நிலையம் அமைத்தல், செங்கல் சூளை அமைத்தல்	5
	மொத்தம்	51

இந்நல வாரியத்திற்கு 2010–2011 மற்றும் 2011–2012 ஆகிய இரு ஆண்டுகளில் ரூ.2.00 கோடி நிதியொதுக்கீடு செய்யப்பட்டு, நலத் திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

ஆதரவற்ற 40 வயதிற்கு மேற்பட்ட ஏழ்மை நிலையிலுள்ள திருநங்கைகளுக்கு மாதம் ரூ.1,000/– வீதம் உதவித் தொகை வழங்கும்

திட்டத்தின்கீழ், 2012–2013 ஆம் நிதியாண்டிற்கு ரூ.1,17,59,000/– (ரூபாய் ஒரு கோடியே பதினேழு இலட்சத்து ஐம்பத்து ஒன்பதாயிரம் மட்டும்) நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இதில் ரூ.35.00 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டவகையில், 500 திருநங்கைகள் பயனடைந்துள்ளனர். 2013–2014 ஆம் நிதியாண்டிற்கு ரூ.1,28,00,000/– (ரூபாய் ஒரு கோடியே இருபத்தெட்டு இலட்சம் மட்டும்) நிதியொதுக்கீடு செய்யப்பட்டு, இதில் ரூ.89.16 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்ட வகையில், 743 திருநங்கைகள் பயனடைந்துள்ளனர்.

133 திருநங்கைகளுக்கு தொகுப்பு வீடுகள் கட்டி வழங்கிட ஏதுவாக, ஒரு தொகுப்பு வீட்டிற்கு ரூ.75,000/– வீதம் ரூ.99,75,000/– (ரூபாய் தொண்ணூற்று ஒன்பது இலட்சத்து எழுபத்து ஐந்தாயிரம் மட்டும்) சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்குப் பிரித்து வழங்கப்பட்டு, தொகுப்பு வீடுகள் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சென்னை மாவட்டத்தில் வாழும், தமிழ்நாடு திருநங்கைகள் நல வாரியத்தில் உறுப்பினராக உள்ள, மொத்தமுள்ள 638 திருநங்கைகளில், 260 திருநங்கைகளுக்குக் குடிசை மாற்று வாரியத்தின் அடுக்குமாடி குடியிருப்புகளில், வீடுகள் ஒதுக்கும் கருத்துரு, தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது.

தமிழ்நாடு அரசால் திருநங்கைகளின் நல்வாழ்விற்காக நடைமுறைப்படுத்தப்படும் பல்வேறு நலத் திட்டங்களை உச்ச நீதிமன்றம் தன்னுடைய தீர்ப்பில் பாராட்டியுள்ளது. உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படி திருநங்கைகளுக்கு படிப்பு/வேலைவாய்ப்பில் உடனடியாக முறையான அனுமதி மற்றும் ஒதுக்கீடு வழங்குவது தொடர்பான கருத்துரு மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளது. உரிய ஆணைகள் மத்திய அரசிடமிருந்து பெறப்பட்டவுடன், இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உச்ச நீதிமன்றத்தில் மூன்றாம் பாலினம் என்ற தீர்ப்பினை ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பாக

2014 ஆகஸ்ட் 11] [செல்வி கே. பாலபாரதி]

வழங்கியிருக்கிறார்கள். இத்தீர்ப்பு குறித்தும், எதிர்காலத்தில் அவர்களுக்கான நடைமுறை செயல் திட்டங்கள் குறித்தும் நம்முடைய தமிழக அரசு மூன்றாம் பாலினத்தவரோடும், அதேபோன்று அவர்களுக்காக பல்வேறு பணிகள் செய்து கொண்டிருக்கக்கூடிய சமூகத் தொண்டு நிறுவனங்களோடும் ஒரு கலந்தாய்வுக்கு ஏற்பாடு செய்து, எதிர்காலத் திட்டத்தினை வகுக்கலாம் என்ற கருத்தை நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

அதேபோன்று, திருநங்கையர்களுக்கு வாடகை வீடுகள் கிடைப்பதில் சிரமம் உள்ளது. அவர்களினுடைய பாதுகாப்பு கருதி, அரசு எடுத்திருக்கக்கூடிய சில நடவடிக்கைகள் குறித்து அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. மேலும், அவர்களுக்கான வீடு என்ற அடிப்படைத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். கல்வி, வேலைவாய்ப்புகளில் அவர்களுக்கு இட ஒதுக்கீடு அவசியம் என்று கருதுகிறார்கள். அதேபோன்று, வேலைவாய்ப்பு பெறுவதற்கு, வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பொதுப் பிரிவிலே பதிவு செய்கிறார்கள். அதை ஒரு சிறப்புப் பொதுப் பிரிவாக உட்படுத்த வேண்டுமென்று அவர்கள் வலியுறுத்தியிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி, நீங்கள் ஒரு கேள்வி கேளுங்கள்.

செல்வி கே. பாலபாரதி: ஆகவே, இந்த மூன்றாம் பாலினம் குறித்து தமிழக அரசினுடைய கொள்கை மற்றும் அவர்களுக்குரிய ஒரு சட்டம் இயற்றுவது அவசியம் என்ற கோரிக்கையை அவர்கள் முன்வைத்திருக்கிறார்கள். அதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து அமர்கிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. பார்த்தசாரதி அவர்கள்.

***திரு. ப. பார்த்தசாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநங்கைகள், சமுதாயத்தில் ஆண்களுக்கும், பெண்களுக்கும் நிகரான நிலையை அடைய வேண்டும். பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் ஆகியோருக்கு தனியாகத் துறைகள் உள்ளதுபோல், திருநங்கைகளுக்கும் ஒரு துறையை உருவாக்க வேண்டும்.

அப்பொழுதுதான் அவர்களுடைய பிரச்சினை குறித்து விரிவான வகையில் நலத் திட்டங்களைச் செயல்படுத்த ஏதுவாக இருக்கும். மேலும், திருநங்கைகள் உயர் கல்வி பயிலும் வரை இலவசக் கல்வி வழங்க வேண்டும். அரசுப் பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்யும் வசதியை ஏற்படுத்தித் தர வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. பார்த்தசாரதி, அறிக்கையைப் படித்துவிட்டு ஒரு கேள்வியைக் கேளுங்கள்.

திரு. ப. பார்த்தசாரதி: ஒரே ஒரு நிமிடம். மேலும், 40 வயதிற்கு மேற்பட்ட ஏழை திருநங்கைகளுக்கு வழங்கப்படும் நிதியுதவியை மூன்றாயிரம் ரூபாயாக உயர்த்தவும், வயது வரம்பினைத் தளர்த்தி அனைவருக்கும் நிதியுதவி வழங்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கின்றேன். தமிழகத்தில் திருநங்கைகள், சமூகத்தாலும், குடும்பத்தினராலும் புறக்கணிக்கப்பட்டு வருகிறார்கள். அவர்களுக்கு சமூக நலத் துறைமூலம் குடும்ப உறுப்பினர்களுக்கும், திருநங்கைகளுக்கும் விழிப்புணர்வுப் பிரச்சாரம் செய்ய வேண்டுமென்று கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசால்தான் திருநங்கைகளின் நல்வாழ்விற்காக நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கின்ற பல்வேறு நலத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன என்பதை நான் இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு இந்த மன்றத்திலே பதிய வைக்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பிலே, அம்மா அவர்களுடைய திட்டங்களைப் பாராட்டியிருக்கிறார்கள். இந்தியாவிலேயே திருநங்கைகளின் நல்வாழ்விற்காகப் பல்வேறு திட்டங்களைத் தீட்டியிருப்பவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) இதை அனைத்து மாநிலங்களும் பின்பற்ற வேண்டுமென்பதற்காக, அனைத்து மாநில அரசு அலுவலர் இன்றைக்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசிலே செயல்படுத்தக்கூடிய திட்டங்களை,

2014 ஆகஸ்ட் 11] [திருமதி பா. வளர்மதி]

துறை வாரியாகக் கேட்டு, பெற்றுச் சென்றிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, இந்தியாவிலேயே, ஏன் இன்னும் சொல்லப்போனால், உலகத்திலேயேகூட திருநங்கைகளுக்காக உதவித் தொகை வழங்கியிருக்கிற ஒரே முதலமைச்சர், (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டினுடைய மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்று சொன்னால், அது மிகையாகாது. மாண்புமிகு அம்மா அவர்கள் ஒருவர்தான், அவர்களையும் மனிதநேயத்தோடு ஏற்றுக் கொண்டு, அவர்களுக்கு 1,000/– ரூபாய் உதவித் தொகை வழங்க வேண்டுமென்று கேட்ட மாத்திரத்திலேயே, தயக்கம் ஏதும் இல்லாமல் இன்றைக்கு உதவித் தொகை பெறக்கூடிய நபர்களுக்காக ஒரு கோடியே 17 இலட்சத்து 59 ஆயிரம் ரூபாய் நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(முற்பகல் 11–40

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் திருநங்கைகளுக்கு குடும்ப அட்டை வழங்கியிருக்கிறார்கள். இன்றைக்கு, உச்ச நீதிமன்றம் மாண்புமிகு அம்மா அவர்களைப் பாராட்டியிருக்கிறது; அதுமட்டுமல்ல, மத்திய அரசுக்கு அறிவுறுத்தியிருக்கிறது. மத்திய அரசுக்கு அறிவுறுத்தியிருக்கக்கூடிய காரணிகளை நம்முடைய தமிழ்நாடு அரசாங்கத்திற்கு இதுவரை மத்திய அரசு அறிவுறுத்தவில்லை. அறிவுறுத்தியதற்குப் பிறகு, அந்தக் கருத்துகளை ஏற்றுக்கொண்டு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்ததாக, மாண்புமிகு உறுப்பினர்கள் திருநங்கைகளுக்கு வீடு வழங்குவது பற்றிச் சொன்னார்கள். இந்தியாவிலேயே தமிழ்நாட்டிலேதான் திருநங்கைகளுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது, (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் தொகுப்பு வீடு கட்டிக்கொள்வதற்காக ரூ.75,000/– வழங்கியிருக்கக்கூடிய அரசும் மாண்புமிகு அம்மா அவர்களின் தலைமையிலான அரசுதான் என்பதை நான் இந்த மாமன்றத்தில் பதிய வைக்க விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, அவர்களுடைய வாழ்வாதாரத்தைப் பெருக்கிக்கொள்வதற்கு தையல் இயந்திரம் வழங்கப்பட்டிருக்கிறது.

மருத்துவர் ரீதியாக அவர்களுக்கு அவ்வப்போது ஏற்படக்கூடிய சிறிய, சிறிய பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்வதற்கு மருத்துவக் காப்பீட்டு அட்டை வழங்கப்பட்டு வருகிறது.

அதுமட்டுமல்ல, அவர்கள் சுயமாகத் தொழில் செய்துகொள்வதற்கு, சுய உதவிக் குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டு, அதன்மூலம் அவர்களுக்குக் கடன் உதவிகள் வழங்கப்பட்டு, அவர்கள் தங்கள் வாழ்வாதாரத்தைப் பெருக்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆக, இந்தியாவிலேயே இன்றைக்கு திருநங்கைகளுக்காகப் பல்வேறு நல்ல திட்டங்களைத் தீட்டி செயல்படுத்திக் கொண்டிருக்கிற ஒரே முதலமைச்சர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் என்பதை இந்த நேரத்தில் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்ல, திருநங்கைகள் ஆசிரியர் பயிற்சிப் படிப்பு படித்துக்கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் திருநங்கைகளுக்காக கல்வி உதவித் தொகையாக ரூ.1 கோடி வழங்கி, அத்திட்டத்தின்கீழ் யாரெல்லாம் படிக்க வேண்டும் என்று விரும்புகிறார்களோ, அவர்களுக்கு நிதி வழங்க வேண்டும் என்று உத்தரவிட்டதன் அடிப்படையிலே, சேலத்திலே இந்து என்கிற திருநங்கை கல்வி உதவித் தொகை பெற்று படித்துக் கொண்டிருக்கிறார். அதுபோல, சென்னை மாநிலக் கல்லூரியில் வேதியியல் பாடப் பிரிவில் சேர்ந்து தினேஷ் குமார் என்கிற திருநங்கையும் படித்துக் கொண்டிருக்கிறார். ஆக, மாண்புமிகு அம்மா அவர்கள் அளிக்கக்கூடிய சலுகைகளை தெரிந்துகொண்ட காரணத்தால் படிப்பதற்கு ஆர்வத்தோடு திருநங்கைகள் முன்வந்து பயனடைந்து முன்னேறி வந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். ஆக, இந்தியாவிலேயே மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் திருநங்கைகளுக்காகப் பல்வேறு திட்டங்களைத் தீட்டிக்கொண்டிருக்கிற முதலமைச்சர் என்பதை இந்த மன்றத்தில் பதிவு செய்கிறேன்.

மாண்புமிகு தே.மு.தி.க. உறுப்பினர் திருநங்கைகளுக்கென தனித் துறை ஏற்படுத்தப்பட வேண்டுமென்று சொன்னார். தமிழ்நாட்டிலே திருநங்கைகள் எனக் கண்டறியப்பட்டு இருப்பவர்கள் மிகக் குறைந்த நபர்கள்தான். அவர்களுக்கென தனித் துறை அமைக்க

2014 ஆகஸ்ட் 11] [திருமதி பா. வளர்மதி]

வேண்டிய அவசியம் இல்லை. குறைந்த எண்ணிக்கையில் உள்ள திருநங்கைகளுக்கு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அதிகமான நிதியுதவி அளித்துக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) திருநங்கைகளும் தங்களுடைய வாழ்வாதாரத்தைப் பெருக்கிக் கொண்டிருக்கிறார்கள், அவர்களும் படித்துக்கொண்டிருக்கிறார்கள், சுய தொழில் செய்து கொண்டிருக்கிறார்கள், அவர்கள் சொந்த வீடுகளில் வசித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கென தனித் துறை அமைக்க வேண்டிய அவசியம் தற்போது ஏற்படவில்லை என்பதை மாண்புமிகு தே.மு.தி.க. உறுப்பினர் அவர்களுக்கு தெளிவாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போல, மாண்புமிகு உறுப்பினர், செல்வி கே. பாலபாரதி அவர்கள் இங்கே பேசுகின்றபோது, திருநங்கைகள் தங்கள் வாழ்வாதாரத்தை உயர்த்திக்கொள்ள வேண்டுமென்பதற்காக அரசு இன்னும் பல உதவிகளைச் செய்ய முன்வர வேண்டும் என்று குறிப்பிட்டார். திருநங்கைகளுடைய தேவையறிந்து, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசை அவர்கள் நாடுவார்களேயானால், மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு அவர்களுடைய கோரிக்கையை எடுத்துச் சென்று நிறைவேற்றப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

5. அறிக்கைகள் அளித்தல்

சட்டவிதிகள் ஆய்வுக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். சட்டவிதிகள் ஆய்வுக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞா. செந்தமிழன், சட்டவிதிகள் ஆய்வுக் குழுவின் தலைவர் அவர்கள்.

***திரு. ஞா. செந்தமிழன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்ணியத்தோடு, கடமையுணர்வோடு, கடமையில் தவறாத காவியத் தலைவி; நாடு முழுவதும் நல்லவர்களும், நன்றிமிக்கவர்களும், நாட்டின்மீது அக்கறை கொண்டவர்களும், நாளேடுகளும், பாராட்டுகின்ற, போற்றுகின்ற, நல்லாட்சிக்கு நற்சான்றாக (மேசையைத் தட்டும் ஒலி) நாடாளுமன்றத்தில் 37 இடங்கள் கிடைக்கச் செய்த, நாளைய தலைமுறைக்கும்